**திக்வெல்ல பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 27 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 08 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 15 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து திக்வெல்ல பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது நிலையான வைப்புக்கள் மீது கிடைத்திருந்த வட்டி வருமானம் ரூபா 1,403,060 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதி அளவில் உள்ளுராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 2,431,906 இற்கான மீதிக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை சரியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 123,773,884 தொகைக்கான 08 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே, கூட்டுத்தொகை ரூபா 63,851,806 இற்கான சமமின்மைகள் காணப்பட்டன. | உரிய மீதிகளில் உள்ள வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 480,135,825 தொகைக்கான 06 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நாளதுவரை ஆக்கி சமர்ப்பிப்பேன் என அறிவிக்கின்றேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 143 | திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்பு பேரேடு மாதாந்தம் கூட்டப்பட்டு கூட்டுத்தொகை பிரதான பேரேட்டுக் கணக்கு டன் சீராக்கல் செய்யப்பட் டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | வைப்புக்கள் பதிவேடு மற்றும் பிரதான பேரேட்டுக் கணக்கு மாதாந்தம் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ii) விதி 193 | பாதீட்டு மற்றும் குறைநிரப்பு அங்கீகரிக்கப்பட்ட செலவு களுடன் செலவு விடயங்களின் உண்மையான செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாக காரணங்களைக் காட்டும் கூற்றொன்று கணக்கு களுடன் சமர்ப்பித்திருக்க வில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சமர்ப் பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 21,207,962 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 24,879,324 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 5,741,924 | 6,509,219 | 7,034,064 | 2,357,524 | 3,330,579 | 3,312,587 | 2,982,033 | 2,882,367 |
| வாடகை | 4,690,620 | 7,056,591 | 7,108,042 | 1,600,190 | 4,886,100 | 4,491,445 | 4,691,447 | 1,651,640 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 1,257,000 | 1,859,646 | 1,859,646 | - | 1,252,500 | 1,340,125 | 1,340,125 | - |
| ஏனைய வருமானங்கள் | 35,055,786 | 32,173,788 | 23,839,199 | 202,750,321 | 19,454,181 | 21,828,643 | 14,954,688 | 194,415,732 |
| மொத்தம் | 46,745,330 | 47,599,244 | 39,840,951 | 206,708,035 | 28,923,360 | 30,972,800 | 23,698,293 | 198,949,739 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி**<br>மீளாய்வாண்டிற்கான ஆரம்ப நிலுவை வீதவரி மீதி ரூபா 2,768,170 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 3,470,268 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 6,238,438 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 3,986,473 தொகை ஆகக் காணப்பட்டமையால், வருட இறுதியில் ரூபா 2,251,965 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தினை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| **(ஆ) ஏக்கர் வரி**<br>நிலுவை ஏக்கர் வரி ஆரம்ப மீதி ரூபா 60,883 தொகையாகக் காணப் பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டை யிடல் ரூபா 6,941 தொகை ஆகக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடு ரூபா 15,580 தொகையாக காணப்பட்டமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 52,245 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தினை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 ஏனைய வருமானங்கள்

**நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 3,641,820 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 22,179,566 தொகை முத்திரைக் கட்டணம் பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை பெற்றுக் கொள்வதற்காக பிரதான செயலாளரிடம் விண்ணப் பித்துள்ளேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபையின் அதிகார பிரதேசத்தில் மாதாந்தம் சேகரமாகும் சுமார் 40 டொன்கள் உக்கக்கூடிய குப்பைகளை பயன்படுத்தி திக்வெல்லை பொதுச் சந்தை வளவில் நிறுவப்பட்டுள்ள உயிர்வாயு அலகு ஊடாக மீள்சுழற்சி அலுவல்கள் மேற்கொள்ள திட்டமிட்டிருந்த போதிலும் 2017 ஆண்டு முதல் இது செயற்படாது காணப்பட்டது. | சிக்கலை தீர்த்து செயற்படு நிலைமையை நடாத்தப்பட வேண்டும். | செயற்படாத உயிர்வாயு அலகு தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய நிறுவனம் இது தொடர்பாக அக்கரை ஏதும் காட்டவில்லை. |
| (ii) | குப்பைகள் அகற்றுதல் மற்றும் மீள்சுழற்சி செய்யும் செயற்பாடு சரியாக மேற்கொள்ளப்படாமையால் உக்காத குப்பைகள் சபைக்குச் சொந்தமான 40 ஏக்கர் திறந்த காணியில் குவிக்கப்பட்டிருந்தன. | குப்பைகள் அகற்றுவதற்கு முறைப்பிரகாரம் செயற்பட வேண்டும். | தற்போது இந்த இடத்தில் குப்பை சேகரிக்கப்படுவதில்லை. |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கோட்டகொட பாத்தேகம சந்தியில் இருந்து உடுபிடிய பாதையில் நீர்க்குழாய் பரப்பும் போது சேதம் விளைக்கப்பட்ட பாதையை திருத்துவது தொடர்பாக ரூபா 1,774,650 இற்கான மதிப்பீடு ஒன்று 2016 நவம்பர் 15 ஆம் திகதி தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு சமர்பித்திருந்ததுடன் அதற்காக அந்நிறுவனத்திடமிருந்து ரூபா 1,632,150 இற்கான தொகை ஒன்று 2017 ஒக்தோபர் 19 ஆம் திகதி சபைக்கு கிடைத்திருந்தது. மேலும், குழாய் பரப்பும் அலுவல்கள் 2019 | குறிப்பிட்ட பாதையின் நவீன மயப்படுத்தும் அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

மே 29 ஆம் திகதி முடிவடைந்திருந்த போதிலும் குறிப்பிட்ட பாதையை நவீன மயப்படுத்தும் அலுவல்களை பூர்த்தி செய்திருக்கவில்லை.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 18 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மிகை ஊழியர் ஒருவரை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணியின் மிகை பதவி களை முறைப் படுத்துவதற்கு மற்றும் வெற்றி டங்கள் நிரப்பவும் வேண்டும். | வெற்றிடங்களை நிரப்பு வதற்கு உள்ளுராட்சி ஆணையாளரிடம் கோரியுள்ளேன். |
| (ஆ) **ஊழியர் கடன்** | | |
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 08 ஊழியர்களிடம் அறவிடப்படாமல் காணப்பட்ட ரூபா 486,434 தொகைக்கான கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விரைவாக நிலுவைக் கடன்மீதிகள் அறவிடப்பட வேண்டும். | கடன் தொகையை அறவீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

**3.4 செயற்பாட்டுத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) இலக்கம் 935/6 மற்றும் 1996 ஆக்ஸ்ட் 06 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் துண்டுகளாக பகிர்வு செய்து விற்பனை செய்யும் 02 காணிகள் சமூக களியாட்ட அலுவல்களுக்காக சபைக்கு கிடைக்க வேண்டிய 42.63 பர்சஸ் அளவான காணி குறைவாக பெறப்பட்டுள்ளது. | வர்த்தமானியின் பிரகாரம் காணித்துண்டுகள் சபைக்கு கிடைக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலக்கம் 2094 மற்றும் 2018 ஒக்தோபர் 10 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அறிவித்தல் பலகை பொருத்துதல் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொண்டு இருக்காததுடன், 2019 திசெம்பர் 03 திகதி மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள பரிசோதனையின் போது காட்சிப்படுத்தப்பட்டிருந்த 81 அறிவித்தல் பலகைகள் தொடர்பாக ரூபா 273,365 இற்கான கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | வர்த்தமானியின் பிரகாரம் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | உரிய கட்டணங்களை அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் தபசஅ/5/6/பொது மற்றும் 2010 திசெம்பர் 27 ஆம் திகதிய சுற்றறிக்கையின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான பொதுச் சந்தை பஸ் நிலைய 37 கடைகளின் 03 வருடங்களுக்கு ஒருமுறை உடன்படிக்கை நாளதுவரை ஆக்கப்பட்டிருக்காததுடன் 6 ஆம் பிரிவின் பிரகாரம் 13 கடைகள் 05 வருடங்களுக்கு ஒருமுறை வாடகைத் தொகை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான சன்சைன் சிடி வீடமைப்புத் திட்டத்திலிருந்து பொது அலுவல்களுக்காக பெற்றிருந்த 60 பர்சஸ் காணியை அங்கீகாரமின்றி பயன்படுத்துவது தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அங்கீகாரமற்ற குடியிருப்பாளர்களை அகற்ற வேண்டும். | வரைபுகளில் குறைபாடுகள் காணப்பட்டமையால் பினேன்ஸ் கம்பனிக்கு அறிவித்து சரி செய்வதற்க நடவடிக்கை எடுப்பேன். |

### 3.5.2 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான றுகுணு எண்ணெய் ஆலைக்கு பக்கத்தில் அமைந்துள்ள கிணறு அமைந்துள்ள காணி, உடதெனிய பாதை வெலேவத்த பொதுக் கிணறு அமைந்துள்ள காணி மற்றும் 28 மயானங்கள் என்பவற்றை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரித்தாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரித்தாக்குவதற்கு தேவையான அலுவல்களை மேற்கொள்வேன். |